**இரண்டாந் தர நகரங்கள் மற்றும் கிராம சமூக அடிப்படையிலான நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டம் (கடன் இல 2276 எஸ்ஆர்ஐ) - 2014**

---

இரண்டாந்தர நகரங்கள் மற்றும் கிராமிய சமூக அடிப்படையிலான நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2007 யூன் 06 ஆம் திகதிய செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09 ஆம் பிரிவு மற்றும் 2276 எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் உடன்படிக்கை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணியின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

---

இரண்டாந்தர நகரங்கள் மற்றும் கிராமிய சமூக அடிப்படையிலான நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் படி, முன்னாள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் கீழுள்ள தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச்சபை செயற்திட்டத்தின் பிரதான நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராகவுள்ளது. வட மத்திய மாகாணத்தின் ஐந்து நகரப்பகுதிகள் மற்றும் கிராமப் பகுதிகளிலுள்ள 969,000 மக்களுக்கு பாதுகாப்பான நீர் வழங்குதல் மற்றும் 171,500 மக்களுக்கு சுகாதார வசதிகளை வழங்குதல் என்பவற்றுடன் நீர்த்துறை நிறுவனங்களைப் பலப்படுத்துவதன் மூலம் பாதுகாப்பான நீரை வழங்குவதற்கான இலங்கையின் இயலளவை அதிகரித்தல் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். ஆரம்பத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியானது 2003 ஆகஸ்ட் 18 ஆம் திகதிய 1993 எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் இலக்க கடனின் கீழ் ரூபா 5,803 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 60.29 மில்லியன் அதன் ஆரம்ப மதிப்பீட்டு ஆவணத்திலிருந்து விலை வேறுபாடு காரணமாக ஒதுக்கப்பட்டிருந்தது. ஆசிய அபிவிருத்தி வங்கியானது மேற்குறிப்பிட்ட நோக்கங்களை அடைவதற்கு 2276 எஸ்ஆர்ஐ ஆம் இலக்க குறைநிரப்பக் கடனொன்றை அங்கீகரித்திருந்தது. குறைநிரப்பு கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் ஆரம்ப மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 6,889 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 63.24 மில்லியனானதுடன் அதில் 4,336 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 39.81 மில்லியன் அல்லது 63 சதவீதம் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்ததுடன் இலங்கை அரசாங்கத்தால் 2,552 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 23.43 மில்லியன் அல்லது 37 சதவீதம் நிதியளிக்க உடன்பட்டிருந்தது. கிரய அதிகரிப்பின் விளைவாக, ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட மொத்தத் தொகை 5,323 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 48.80 மில்லியன் வரை அதிகரித்திருந்ததுடன் இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்பும் 4,568 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 41.87 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2010 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்று பட்டியலிடப்பட்டிருந்தது. பின்னர் செயற்திட்டக் காலப்பகுதி 2014 யூலை 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கடனின் குறைநிரப்பு ஒதுக்கீட்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

**1.4 கணக்காய்வாரின் பொறுப்பு**

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். நான் எனது கணக்காய்வினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க மேற்கொண்டேன். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்றும் நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கத்தின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தது என்றும், மற்றும்

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 67,654 தொகையான நாணய தளம்பல் ஒதுக்கக் கணக்கின் மீதி நிதிக்கூற்றுக்களின் நடைமுறைபொறுப்புகளின் கீழ் முறையற்ற விதத்தில் காட்டப்பட்டிருந்தது.

**2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது ரூபா 38 மில்லியன் தொகையான பெறுமதி சேர் வரிக் (வற்) கொடுப்பனவுகள் மீதான அறிக்கைகள் கொள்வனவு வழிகாட்டலின் 5.4.12 ஆம் பிரிவு, 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டத்தின் 21 ஆம் பிரிவு மற்றும் 2002 செப்தெம்பர் 30 ஆந் திகதிய 364(3) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி என்பவற்றிற்கமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1987 இன் 03 ஆம் இலக்க அரச ஒப்பந்த அதிகாரச்சட்டத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம், ரூபா 5 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்டவற்றிற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தகாரர்கள் பொது ஒப்பந்தப் பதிவாளரின் கீழ் பதிவுசெய்யப்பட வேண்டும். மேலும், கேள்வி வழங்கிய பின்னர் 60 நாட்களிற்குள் கேள்வியாளர் உடன்படிக்கை பொது ஒப்பந்தப் பதிவாளரின் கீழ் பதிவுசெய்யப்பட வேண்டியிருந்தது. இந்த வேண்டுகை செயற்திட்ட நடவடிக்கைகளுடன் ஈடுபட்டிருந்த ஒப்பந்தகாரர்களால் இணங்கியிருக்கவில்லை.

(இ) செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையில் வேண்டப்பட்டவாறு உள்ளக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

செயற்திட்டத்தின் பிரகாரம், 7,905 கனமீற்றர் பாறை வெடி பொருட்கள் வெடிக்கவைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் மீதான செலவினமானது ரூபா 57.8 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும், குறித்த வெடிப்பொருட்கள் செயற்திட்ட

நடவடிக்கைகளுக்கென பயன்படுத்தப்பட்டதா அல்லது விற்கப்பட்டதா என்பதை உறுதிப்படுத்துவதற்கான எதுவித சான்றுகளும் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு மற்றும் பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2014 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 48.80 | 5,323.00 | - | - | - | 48.80 | 5,490.94 |
| இலங்கை அரசாங்கம் | 41.87 | 4,568.00 | 170.00 | 1.26 | 166.25 | 37.60 | 4,295.11 |
| மொத்தம் | 90.67 | 9,891.00 | 170.00 | 1.26 | 166.25 | 86.40 | 9,786.05 |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

சமர்ப்பிக்கப்பட்ட தகவலின்படி, ஹம்பாந்தோட்டை, மட்டக்களப்பு மற்றும் மூதூர் மாவட்டங்களில் குழாய் பொருத்துதல், நீர் சுத்திகரிப்பு பொறியின் நிர்மாணம், தண்ணீர் கோபுரம் மற்றும் கழிவு நீர் வடிகாலமைப்பு முன்னேற்ற நடவடிக்கைகள் போன்றவற்றின் மீதான நான்கு ஒப்பந்தங்கள் ஐ.அ.டொலர் 63.24 மில்லியன் கிரயத்தில் செயற்திட்டத்தின் தொடக்கத்தில் அமுலாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், 04 ஒப்பந்தங்களின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் பின்னர் ஐ.அ.டொலர் 90.66 மில்லியனாக திருத்தப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் கீழான சகல ஒப்பந்தங்களும் 2013 ஏப்ரல் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

---------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செயற்திட்டமானது மட்டக்களப்பு மாவட்டத்தில் தலைமை வேலைகளின் நிர்மாணம் மூல நீர் பரிமாற்றம், சுத்திகரிப்பு பொறி, தண்ணீர் கோபுரம் மற்றும் குழாய்கள் வழங்கல் மற்றும் பொருத்துதல் ஆகியவற்றில் ஈடுபடுத்தப்பட்ட ஒப்பந்தகாரரால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகள் தீர்க்கப்பட்டதுடன் அவற்றில் ரூபா 11,336,247 தொகையான தாமதக்கட்டணங்கள் செலுத்தப்பட்டது.

(ஆ) செயற்திட்டமானது 2011 யூன் 23 இல் ஜீஏசீ பில்லர் மீடியாவின் 1,720 கனமீற்றர் வழங்குவதற்கு ஐ.அ.டொலர் 1,165,736 மற்றும் ரூபா 4,293,757 செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2014 செப்தெம்பர் 30 இல் ஒப்பந்தகாரரால் 1,315.6 கனமீற்றர் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. மேலும், 2014 செப்தெம்பர் 29 இல் அவற்றில் ஐ.அ.டொலர் 364,825 மற்றும் ரூபா 1,343,761 கழிக்கப்பட்டிருந்தது.

**3.4 சர்ச்சைக்குரிய விடயங்கள்**

-----------------------------------

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தகாரருக்கு செலுத்தவேண்டிய ரூபா 62 மில்லியன் தொகை இலங்கை அரசாங்கத்தின் பங்களிப்புகளில் தீர்க்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டதுடன் கணக்கீட்டு சீராக்கல்கள் பொது திறைசேரியால் சான்றுபடுத்தப்பட்டிருக்காத போதிலும் அதன்படி செய்யப்பட்டிருந்தது.